ISSN : 2455 - 0531

# இனம்

இனம் இனத்தைச் சேரும்

Mail Id: inameditor@gmail.com
editor@inamtamil.com

UAN.TN03D0061112

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

International E-Journal of Tamil Studies

இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!

மலர்:5 இதழ்:19 நவம்பர் 2019 Vol. 5 Issue : 19 November 2019





சி.சாவித்ரி
ஷா. முஹம்மது அஸ்ரின்
ல.கு.சு.இராஜ்குமார்
ப.ராகசுதா
சி.விஜயன்
ம.செந்தில்குமார்

மு.கயல்விழி
SINNATHAMBY LAVAPRIYAA
கி. ஜெகதீசன்
செ. பிரவீன்

அ.சு. செல்வரமேஷ்
பெ. விஜயகுமார்
ஜூ.மரியா செபாஸ்டின்
மு. வையாபுரி
த.சத்தியராஜ்

Inam ISSN : 2455 - 0531

UAN.TN03D0061112

# இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

*International E-Journal of Tamil Studies*

## பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி
தமிழ் உதவிப்பேராசிரியர்
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி - 17.

முனைவர் த.சத்தியராஜ்
தமிழ் உதவிப்பேராசிரியர்
ஸ்ரீகிருஷ்ணா ஆதித்யா கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 42.

## ஆலோசனைக் குழு

முனைவர் செ.வை.சண்முகம் (சிதம்பரம்)
முனைவர் சு.இராசாராம் (நாகர்கோயில்)
முனைவர் சிலம்பு நா.செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ந.வேலுச்சாமி (சேலம்)
திரு சு.ஸ்ரீகந்தராசா (ஆஸ்திரேலியா)

## ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் க.பாலாஜி (கோவை)
முனைவர் இரா.குணசீலன் (கோவை)
முனைவர் ந.இராஜேந்திரன் (கோவை)
முனைவர் இரா.இராஜா (திருச்சி)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (தஞ்சாவூர்)
திருமிகு எப்.எச்.அகம்மது சிப்லி (இலங்கை)

இதழாக்கமும் வெளியீடும்
இனம் பதிப்பகம், கோவை
inameditor@gmail.com
www.inamtamil.com
9600370671, 9677821364

நவம்பர் 2019 மலர் : 5 இதழ் : 19
November 2019 Volume V Issue 19

## உள்ளே ...

### தமிழ்ச் செவ்வியல்

தொல்காப்பியம் - தெலுங்கு மொழிபெயர்ப்பு
Tolkappiyam - Telugu Translation
முனைவர் சி.சாவித்ரி/Dr.Ch.Savithri | 4

பெரும்பாணாற்றுப்படையில் பழந்தமிழரின் உணவுகள்
Foods of ancient Tamizhar in Perumpaanaatrupadai
ஷா. முஹம்மது அஸ்ரின் / S.Mohamed Azrin | 12

சங்க இலக்கியத்தில் தாயும் சேயும்
Mother and Child in the Sangam literature
ல.கு.சு.இராஜ்குமார்/L.K.S.Rajkumar & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 19

குறுந்தொகை - நெஞ்சொடு கிளத்தல் : உளவியல் பார்வை
The Psychological View of Heartful Lament in Kurunthokai
ப.ராகசுதா/B.Ragasudha & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 25

பத்துப்பாட்டில் ஆடை
Clothing in Paththuppattu
சி.விஜயன்/ C.Vijayan & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 30

### வரலாறு - சமூகவியல் - புவியியல் - கல்வியியல்

காவிரிப் படுகையில் அருகி வரும் உம்பளாச்சேரி எருதுகளின் எண்ணிக்கையும், அதன் பயன்பாடுகளும்
Declining of Trend of Umblachery Bullocks in Numbers and Its Utility in Cauvery Delta Zone
கி. ஜெகதீசன்/K.Jagadeesan, செ. பிரவீன் /S.Praveen /அ.சு. செல்வரமேஷ் /A.S. Selvaramesh, பெ. விஜயகுமார்/P. Vijayakumar, லூ.மரியா செபாஸ்டின்/L.Maria Sebastin | 34

பல்லவர் கால வரிவிதிப்பு முறை
Pallavas Taxation method
மு.கயல்விழி/M.kayalvizhy | 37

...

## Chief Editors

**Dr.M.Muneesmoorthy**
Assistant Professor in Tamil
Bishop Heber College, Trichy - 17.

**Dr.T.Sathiyaraj**
Assistant Professor in Tamil
Sri Krishna Adithya College of Arts and Science, Coimbatore - 42.

## ADVISORY TEAM

Dr.S.V.Shanmugam (Chidambaram)
Dr.S.Rajaram (Nagarkovil)
Dr.Silambu.N.Selvarasu (Pondichery)
Dr.N.Veluchamy (Salem)
Sri S.SriKantharasa (Australia)

## Editorial Team

Dr.A.Mani (Pondichery)
Dr.G.Balaji (Coimbatore)
Dr.R.Gunaseelan (Coimbatore)
Dr.N.Rajendran (Coimbatore)
Dr.R.Raja (Trichy)
Dr.B.Sivamaruthi (Thailand)
Dr.S.Muthuselvam (Madurai)
Dr.S.Vijaya Rajeshwari (Thanjavur)
Thiru.F.H.Ahamed Shibly (Srilanka)


### வரலாறு - சமூகவியல் - புவியியல் - கல்வியியல்


**ஞானபோதினி இதழில் தமிழியல் ஆய்வுகள்**
**Tamil Research through Jounals: Gnanapothini (1897-1903)**
முனைவர் மு. வையாபுரி/Dr.M. Vaiyapuri | 48

**அறிவைக் கட்டமைப்பதிலும், அறிவை மீள் உருவாக்கம் செய்வதிலும் ஆய்வாளர்களின் வகிபங்கு**
**The role of researchers in the construction of knowledge and the reconstruction of knowledge**
சின்னத்தம்பி லாவபிரியா/Sinnathamby Lavapriyaa | 61

**ஒப்பும் மீக்கருத்தியலும் (தமிழ் - தெலுங்கு இலக்கணப் பனுவல்களின் இரண்டாம் வேற்றுமை கருத்தியல்களை முன்வைத்து)**
**Oppum mīkkaruttiyalum (tamil̲ - teluṅku ilakkaṇap pan̲uvalkaḷin̲ iraṇṭām vēr̲r̲umai karuttiyalkaḷai mun̲vaittu)**
சத்தியராஜ் த. / Sathiyaraj T. | 71


...

மதிப்பிடப்பெற்றது

# பத்துப்பாட்டில் ஆடை

## Clothing in Paththuppattu

சி.விஜயன்/C.Vijayan[7] & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar[8]

**Abstract:** The basic needs of a human being are food, clothing, and shelter. All three are very much needed by a man. Clothing is beautiful for man and safe for life. There are many different types of clothing available worldwide today. But the study of the garments used by our ancestors is a study of the people's clothing, which is found in the Sangam literature, Paththuppattu.

**Key words:** Sprigs, Cotton, தழை, பருத்தி ஆடை, பட்டாடை.

ஒரு மனிதனுக்கு அடிப்படைத் தேவைகளாக விளங்குபவை உணவு, உடை, இருப்பிடம் ஆகும். இம்மூன்றும் ஒரு மனிதனுக்கு மிகவும் அவசியமாகிறது. ஆடை மனிதனுக்கு அழகாகவும், வாழ்க்கைக்குப் பாதுகாப்பாகவும் விளங்குகிறது. இன்று உலகம் முழுவதும் பலவிதமான ஆடைவகைகள் மிகுதியாகக் காணக் கிடைக்கின்றன. ஆனால் நமது முன்னோர்கள் பயன்படுத்திய ஆடை வகைகளாக, சங்க இலக்கியம் – பத்துப்பாட்டில் காணலாகும் மக்கள் பயன்படுத்திய ஆடை பற்றிய செய்திகளை ஆய்வதாக இவ்வாய்வு அமைகிறது.

### தழை ஆடை

சங்க இலக்கிய நூல்களான குறிஞ்சிப்பாட்டு, திருமுருகாற்றுப்படை, பட்டினப்பாலை ஆகிய நூல்கள் மக்கள் தழை ஆடைகளை உடுத்தி வாழ்ந்தனர் என்று குறிப்படுகின்றன.

தலைவியும், தோழியும் தினைப்புனம் காக்கச் சென்றபோது அங்கு ஆற்றில் நீராடித் தழை ஆடை உடுத்தினர் என்று குறிஞ்சிப்பாட்டில் கூறப்படுகின்றது. சான்றாக,

"பைவிரி அல்குல் கொய்தழை தைஇப்
பல்வேறு உருவின் வனப்புஅமை கோதைஎம்
மெல்லிரு முச்சிக் கவின்பெறக் கட்டி"(குறிஞ்சிப்.102-104)

மலையில் வாழும் மகளிர், பூக்களால் சேர்த்துச் செய்யப்பெற்ற தழை ஆடையை உடுத்தினார்கள் என்றும், அவர்கள் தழை ஆடையை உடுத்தியதால் மயில் போன்ற காட்சியினை உடையவர்களாகத் திகழ்ந்தனர் என்றும் திருமுருகாற்றுப்படையில் உவமிக்கப்பட்டுள்ளது. இதனை,

"முடிந்த குல்லை இலையுடை நறும்பூ

---

[7] முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர் – 632 115. மின்னஞ்சல் : kurinji0807@gmail.com

[8] இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர் – 632 115. மின்னஞ்சல் : malaisenthilptp@gmail.com

செங்கால் மராஅத்த வால்இணர் இடைஇடுபு

சுரும்புஉணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகாழ் அல்குல் திளைப்ப உடீஇ

மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு" (முருகு.201 – 205)

என்ற பாடலடிகளின் மூலம் அறிய முடிகிறது.

மென்மையான தலையையுடைய கரிய பரதவர் பசுமையான தழையை உடுத்தி மீன்வேட்டைக்குச் செல்லாது, தாம் விரும்பி உண்ணக்கூடிய மீன் உணவினை உண்டு விளையாடி மகிழ்ந்துள்ளனர். இதனை,

"புன்தலை இரும்பரதவர்
பைந்தழைமா மகளிரொடு
பாய்இரும் பனிக்கடல் வேட்டம் செல்லாது
உருவுமடிந்து உண்டு ஆடியும்" (பட்டினப்.90–94)

எனும் பாடலடிகள் மூலம் தெளிவாக எடுத்தியம்புகின்றன. மேலும் கலித்தொகை, ஐங்குநுறூறு, புறநானூறு போன்ற நூல்களிலும் தழை ஆடை உடுத்தினர் என்ற செய்தி கூறப்பட்டுள்ளன.

**நூலால் செய்யப்பெற்ற ஆடை**

பருத்திப் பஞ்சுகளால் நெய்யப்பெற்ற ஆடைகளைத்தான் நூலால் நெய்யப்பெற்ற ஆடைகள் என்று குறிப்பிடுகிறோம். அதனடிப்படையில், நூலால் நெய்யப்பெற்ற ஆடைகளைப் பெரும்பாணாற்றுப்படை பதிவு செய்கிறது. முருகனை வருணிக்கின்ற போது அழகான ஆடை அணிந்திருந்த தொடையின் மீது ஒரு கை இருந்தது என நக்கீரர் கூறுகிறார். சிறுபாணாற்றுப்படையில் மயில் குளிரால் நடுங்கி அகவுவதாகக் கருதிய பேகன் அம்மயிலுக்குப் போர்வையைத் தந்தான் என்ற செய்தி குறிப்பிடப்படுகின்றது. மற்றும் மதுரைக்காஞ்சியில் கடைவீதிகளில் ஆடையை விற்போர் என்றும் மெல்லிய நூலால் செய்த புடவைகளுக்கு மணப்புகை ஊட்டினர் என்றும் எடுத்தியம்புகிறது.

"நலம்பெறு கலிங்கத்துக்
குறங்கின்மிசை அசைஇயது ஒருகை" (முருகு.109–110)

"கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திறல் அணங்கிய ஆவியர் பெருமகன்
பெருங்கடல் நாடன் பேகனும்" (சிறுபாண்.85 – 87)

"பொன்னுரை காண்மரும் கலிங்கம் பகர்நரும்" (மதுரைக்.513)

"மென்னூற் கலிங்கம் கமழ்புகை மடுப்ப" (மதுரைக். 554)

பாணர்களின் அழுக்குப்படிந்த பாசி போன்ற கந்தல் ஆடைகளை நீக்கி தொண்டைமான் இளந்திரையன் மென்மையான வெண்புகை போன்ற நூலால் செய்யப்பெற்ற ஆடையைக் கொடுத்தான் என்று பெரும்பாணாற்றுப்படையும் பெண்கள் அழகேறிய அழகிய நூல்புடவையை உடுத்தினர் என்றும் நெடுநல்வாடையும் மற்றும் நூல் இழை போகும் இடம் காணமுடியாத நூலால் செய்யப்பெற்ற ஆடையை உடுத்தினர் என்றும் மலைபடுகடாம் குறிப்பிடுகிறது. இதனை,

"பாசி அன்ன சிதர்வை நீக்கி
ஆவிஅன்ன அவிர்நூற் கலிங்கம்" (பெரும்பாண்.468 – 469)

"பூந்துகில் மரீஇய ஏந்துகோட்டு அல்குல்
அம்மாசு ஊர்ந்த அவிர்நூல் கலிங்கமொடு(நெடுநல்.145 – 146)

"இழைமருங்கு அறியா நுழைநூல் கலிங்கம்" (மலைபடு.561)

என்ற பாடலடிகளின் மூலம் காணலாம். மேலும் நற்றிணை, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, கலித்தொகை, அகநானூறு, புறநானூறு போன்ற நூல்களிலும் கலிங்கம் பற்றிய செய்திகள் குறிப்பிடப்படுகின்றன.

**பட்டாடை**

பொருநராற்றுப்படையில் கரிகால் மன்னன் தன்னைப் பாடவரும் பொருநரை இசைப்பதற்கு முன்பே அவர்கள் அணிந்து இருந்த அழுக்கடைந்த பாசிபோன்ற தைக்கப்பெற்ற ஆடையை நீக்கி, கரையில் முடிச்சுகளையுடைய பட்டாடையை உடனே தருவான் என்று குறிப்பிடுகிறது. பட்டினப்பாலையில் காவிரிப்பூம்பட்டினத்துப் பெண்கள் பகல் நேரத்தில் பட்டாடையை உடுத்தினார்கள் என்று குறிப்பிடுகிறது.

"கொட்டைக் கரைய பட்டு உடைநல்கி" (பொருநர்.155)

"பட்டுநீக்கித் துகில்உடுத்தும்" (பட்டினப்.107)

பத்துப்பாட்டை விட எட்டுத்தொகை நூல்களான நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை, பதிற்றுப்பத்து, அகநானூறு, புறநானூறு நூல்களில் பட்டாடை பற்றி அதிகமான இடங்களில் கூறப்படுகின்றன.

**பூவேலைப்பாடு அமைந்த ஆடை**

மாலை நேரத்து வெயில்கதிர்களால் மழுங்கிய சிவந்த நுண்ணிய நிறத்தில் பார்ப்போர் கண்களைப் பொழுது வெல்லும் நிலையில் அமைந்த பூத்தொழிலால் செய்த ஆடையைப் பெண்கள் அணிந்திருந்தினர். இதனை மதுரைக்காஞ்சிப் பாடலடிகள் விளக்குகின்றன.

"வெயிர்கதிர் மழுங்கிய படர்கூர் ஞாயிற்றுச்
செக்கர் அன்ன சிவந்துநுணங்கு உருவின்
கண்பொருபு உகூஉம் ஒண்பூங் கலிங்கம்" (மதுரைக். 431 – 433)

**துகில், காழகம்**

துகில் பத்துப்பாட்டில் பேய், அருவி ஆகியவற்றிற்கு உவமையாகவும் மகளிர்களுக்கு மேலாடையாகவும், இடையில் அணியக்கூடிய ஆடையாகவும் கூறப்பட்டுள்ளன. சூரர மகளிர் இந்திரகோபப் பூச்சி போன்ற சிவந்த மென்மையான ஆடையை அணிந்துள்ளனர் என்றும் முனிவர்கள் முருகனைக் காணச் செல்கின்றபோது குற்றமற்ற, அழுக்கில்லாத, புகை போன்ற தூய்மையான துகில் ஆடையை அணிந்துள்ளனர் என்றும் திருமுருகாற்றுப்படை கூறுகின்றது. பெண்கள் மென்மையான பூந்தொழிலை உடைய துகிலை இடையில் அணிந்தனர் என்றும் இடப்பக்கத்து நழுவிய அழகிய மேலாடையை இடப்பக்கத்தில் அணைத்துக் கொண்டுள்ளனர் என்றும் பகல்

நேரங்களில் உடுத்திய பட்டு ஆடையை இரவு நேரங்களில் நீக்கித் துகிலை உடுத்தினர் என்று கூறப்பட்டுள்ளது. இதனை,

"துணங்கை அம்பூதம் துகில்உடுத்தவை போல்" (பெரும்பாண். 235)

"அவிர்துகில் புரையும் அவ்வெள் அருவி" (குறிஞ்சிப். 55)

"கோபத்து அன்ன தோயாப் பூந்துகில்" (முருகு. 15)

"புகை முகந்தன்ன மாசுஇல் தூஉடை" (முருகு. 138)

"மென்தோள் துகிலணி அல்குல் துளங்குஇயல் மகளிர்" (சிறுபாண். 262)

"பைங்காழ் அல்குல் நுண்துகில் நுடங்க" (பெரும்பாண். 329)

"பூந்துகில் மரீஇய ஏந்துகோட்டு அல்குல்" (நெடு. 145)

"புடைவீழ் அம்துகில் இடவயின் தழீஇ" (நெடு. 181)

"பட்டுநீக்கித் துகில்உடுத்தும்" (பட்டினப். 107)

என்ற பாடலடிகள் தெளிவுபடுத்துகின்றன. அந்தணர்கள் அணிந்து நீராடிய பின்பு முருகனை வணங்கச் செல்கின்றபோது அவர்கள் காழகம் அணிந்து வணங்குவர். இது அந்தணர்களின் வழக்கமாகத் திருமுருகாற்றுப்படை கூறுகிறது.

"புலராக் காழகம் புலர உடீஇ" (முருகு. 184)

**கஞ்சியில் சலவை செய்யப்பெற்ற ஆடை**

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய மன்னன் கஞ்சிப் பசையைக் கொண்டு தடவிய ஆடையை உடுத்தியிருந்ததாக மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது.

"சோறுஅமை வுற்ற நீருடைக் கலிங்கம்" (மதுரைக். 721)

**நிறைவுரை**

பத்துப்பாட்டில் மக்கள் அவர்களுக்குத் துன்பம் இழைக்காத தூய்மையான ஆடைகளும், மென்மையான ஆடைகளும், பட்டு ஆடைகளும், தழை ஆடைகளும், பூவேலைப்பாடு செய்யப்பெற்ற ஆடைகளும், கஞ்சியில் தோய்த்த ஆடைகளும், கந்தல் ஆடைகளும் அணிந்து வாழ்ந்ததாகவும் அறியமுடிகிறது.

பார்வை நூல்கள்

சுப்பிரமணியன் ச.வே, உ. (2004). *பத்துப்பாட்டு.* கோவிலூர்: கோவிலூர் மடாலயம்.

நாகராசன் வி, உ. (2017). *பத்துப்பாட்டு மூலமும் உரையும்.* சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

பகவதி கு. (2003). *தமிழர் ஆடைகள்.* சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.